2022 ஏப்ரல் 29] [திரு. பி.கே. சேகர்பாபு]

இடம் பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, பக்தர்கள் வருவதற்கும், தங்குவதற்கும் தேவையான அளவிற்கு வசதிகளும், தரிசனம் செய்வதற்கு அனைத்து வகையிலும் சிறப்பான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

தளி தொகுதி, யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. K. மாரிமுத்து ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில் இருப்பதை அப்படியே படித்துவிடுங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2022 ஏப்ரல் 29

***மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அறிக்கை

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஓசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட தளி, ஜவளகிரி காப்புக் காடுகளில் நுழைந்து தேன்கனிக்கோட்டை, நொகன்னூர் ஊடேதுர்கம் மற்றும் ஓசூர் சரகத்திற்குட்பட்ட சானமாவு, செட்டிப்பள்ளி, கரியானப்பள்ளி, கும்பளம் போன்ற காப்புக் காடுகளில் சுமார் 150 முதல் 175 யானைகள் முகாமிட்டும், ஏப்ரல் மாதத்தில் கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட கோலார் வனக் கோட்டத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்குட்பட்ட வனப் பகுதிக்குச் சென்று பின்னர் மே மாதத்தில் திரும்பி பன்னர்கட்டா தேசிய பூங்காவிற்கும், காவேரி வன உயிரின சரணாலயத்திற்கும் செல்வது வழக்கமாக உள்ளது.

இவ்வாறு வரும் யானைகளானது காப்புக் காடுகளை விட்டு வெளியேறி, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து முறையே ராகி, கம்பு, சோளம், நெல், கொள்ளு, கரும்பு, மா, தென்னை, வாழை போன்ற பயிர்களை உண்டும், சேதப்படுத்தியும் வருகின்றன. இரவு நேரங்களில் காப்புக் காட்டினை விட்டு வெளியில் வரும் யானைக் கூட்டங்களை வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களைக்கொண்டு பட்டாசுகள், தப்பட்டைகள் மற்றும் ஒளிமிகு விளக்குகள் கொண்டு மீண்டும் யானைகளைக் காப்புக் காட்டிற்குத் திருப்பும் பணியினை காலை வரை மேற்கொள்கிறார்கள்.

யானைகளின் நடமாட்டம் குறித்து பொதுமக்களும், விவசாயிகளும் எச்சரிக்கையாக இருக்க வனப் பணியாளர்களால் தொடர்ந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் யானைகளானது காப்புக் காடுகளை விட்டு வெளியேறி, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து சேதங்கள் ஏற்படுத்துவதையும், மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பதைத் தவிர்க்கவும், யானைபுகா அகழிகள், சூரிய மின் வேலி, கற்தடுப்புச் சுவர்கள், இரும்புவடக் கம்பிவேலி,

2022 ஏப்ரல் 29] [திரு. கா. ராமசந்திரன்]

சூரிய சக்தியில் இயங்கும் இரும்புவடக் கம்பிவேலி மற்றும் தொங்கும் வகையிலான சூரிய சக்தி மின்வேலி போன்ற தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தளி தொகுதியில், 100.84 கி.மீ சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, யானைபுகா அகழி 288.484 கி.மீ.; கிரானைட் கற்தடுப்புச் சுவர் 2 கி.மீ.; இரும்புவடக் கம்பி வேலி 12.1 கி.மீ.; சூரிய சக்தியில் இயங்கும் இரும்புவடக் கம்பி வேலி 16.95 கி.மீ.; தொங்கும் வகையிலான சூரிய மின்வேலி 9.50 கி.மீ. போன்ற தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், மனித–வன விலங்குகள் மோதல்கள் பெருமளவுக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், 50 மனித இறப்பு நிகழ்விற்கு ரூபாய் 166 இலட்சமும், 37 மனித காய நிகழ்விற்கு ரூபாய் 7.65 இலட்சமும், 6,417 பயிர் சேதத்திற்கு ரூபாய் 389.137 இலட்சமும், 5 கால்நடை இறப்பு/ காய நிகழ்விற்கு ரூபாய் 0.088 இலட்சமும், 29 உடைமைகள் சேத நிகழ்விற்கு ரூபாய் 0.97 இலட்சமும், ஆக மொத்தம், ரூபாய் 563.85 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனித உயிர் இழப்பு மற்றும் நிரந்தர ஊனத்திற்கு வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகையான ரூபாய் 4 இலட்சம் 3–11–2021 முதல் ரூபாய் 5 இலட்சமாக அதிகரித்து வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். என்னுடைய தளி தொகுதியில் ஓசூர் வனக் கோட்டத்தில் ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம், ஜவளகிரி போன்ற வனச் சரகங்களில் வன விலங்குகள், காட்டு யானைகள் மற்றும் சிறுத்தைகள் கூட்டம் கூட்டமாக, ஊருக்குள் புகுந்து, விவசாயிகளுடைய நெல், வாழை, கரும்பு, தக்காளி, ராகி, சோளம் போன்ற பயிர்களைச் சேதப்படுத்துகின்றன.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக, இன்னொரு கேள்வி இருக்கிறது.

[2022 ஏப்ரல் 29

திரு. ட்டி. இராமச்சந்திரன்: இதுவரை கடந்த 3–11–2021 வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வழங்குவீர்களா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை பதில் சொல்ல சொல்லலாமா?

திரு. ட்டி. இராமச்சந்திரன்: 22–4–2022 வரை 9 மனித உயிரிழப்புகளுக்கும், 8 மனித காய நிகழ்வுகளுக்கும், 281 விவசாயிகளுடைய பயிர் சேதங்களுக்கும் ஆக மொத்தம் 301 பேருக்கு 20 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்காமல் இருக்கிறது. அந்த இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஓசூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட தளி, ஜவளகிரி காப்புக் காடுகளில் யானைகள் நுழைந்து தேன்கனிக்கோட்டை, நொகன்னூர், ஊடேதுர்கம் மற்றும் ஓசூர் சரகத்திற்குட்பட்ட சானமாவு, செட்டிப்பள்ளி, கரியானப்பள்ளி, கும்பளம் போன்ற காப்புக் காடுகளில் சுமார் 150 முதல் 175 யானைகள் முகாமிட்டும், ஏப்ரல் மாதத்தில் கர்நாடக மாநிலத்திற்குட்பட்ட கோலார் வனக் கோட்டத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்குட்பட்ட வனப் பகுதிக்குச் சென்று பின்னர் மே மாதத்தில் திரும்பி பன்னர்கட்டா தேசிய பூங்காவிற்கும், காவேரி வன உயிரின சரணாலயத்திற்கும் செல்வது வழக்கமாக உள்ளது. இவ்வாறு வரும் யானைகளானது காப்புக் காடுகளை விட்டு வெளியேறி, விவசாயிகளின் நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து அங்குள்ள ராகி, கம்பு, சோளம், நெல், கொள்ளு, கரும்பு, மா, தென்னை, வாழை போன்ற பயிர்களை உண்டும், சேதப்படுத்தியும் வருகின்றன. இரவு நேரங்களில் காப்புக் காடுகளை விட்டு வெளியில் வரும் யானைக் கூட்டங்களை வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்களைக் கொண்டு பட்டாசுகள் மற்றும் தாரை தப்பட்டைகள், ஒளிமிகு

2022 ஏப்ரல் 29] [திரு. கா. ராமசந்திரன்]

விளக்குகள் கொண்டு மீண்டும் யானைகளை காப்புக் காட்டிற்குத் திருப்பும் பணியினை காலை வரை மேற்கொள்கிறார்கள். யானைகள் நடமாட்டம் குறித்து பொது மக்களும் விவசாயிகளும் எச்சரிக்கையாக இருக்க வனப் பணியாளர்களால் தொடர்ந்து எச்சரிக்கை விடப்பட்டு வருகிறது. இந்நிலையில் யானைகளானது காப்புக் காடுகளை விட்டு வெளியேறி விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து சேதங்களை ஏற்படுத்துவதையும், மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பு ஏற்படுத்துவதைத் தவிர்க்கவும், தளி தொகுதியில் யானைபுகா அகழிகள் 288.48 கிலோ மீட்டர், கிரானைட் தடுப்புச் சுவர்கள் 2 கிலோ மீட்டர், இரும்புவடக் கம்பி வேலிகள் 12.1 கிலோ மீட்டர், சூரிய சக்தியில் இயங்கும் இரும்புவடக் கம்பி வேலி 16.95 கிலோ மீட்டர், சூரிய மின்வேலி 100.84 கிலோ மீட்டர், தொங்கும் வகையிலான சூரிய சக்தி மின்வேலிகள் 9.50 கிலோ மீட்டர் போன்ற தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மனித–வன விலங்குகள் மோதல்கள் பெருமளவுக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில் 50 மனித உயிரிழப்பு நிகழ்விற்கு ரூ.166 இலட்சமும், 37 மனித காய நிகழ்விற்கு ரூ.7.65 இலட்சமும், 6,417 பயிர் சேதத்திற்கு ரூ.389.137 இலட்சமும், 5 கால்நடை இறப்பு, காய நிகழ்விற்கு ரூ.0.088 இலட்சமும் 29 உடைமைகள் சேத நிகழ்விற்கு ரூபாய் 0.97 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 563.85 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனத்திற்கு வழங்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகையானது ரூ.4 இலட்சத்திலிருந்து 3–11–2021 முதல் ரூ.5 இலட்சமாக அதிகரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் வனப் பாதுகாப்பினை மிகவும் பலப்படுத்துதல் மற்றும் மனித–வனவிலங்கு முரண்பாடுக்குத் தீர்வு காண்பதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வன உயர் அடுக்குப் படை மற்றும் சிறப்புப் படைகளை அமைத்தல் தமிழ்நாடு வனப் படைக்கு நவீன இரக துப்பாக்கிகள் (Blow gun), நவீன இரக தொலைநோக்கிகள் (Advanced binoculars), அதிநவீன உலோகம் கண்டுபிடிக்கும் கருவி (Metal detector), எண்ணியல் படக்கருவி (Digital camera), அதிநவீன ஆயுதங்கள் வழங்குதல், விரைவான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ரோந்து மற்றும் மீட்புப் பணிகளுக்கு இமாலயன் இரு சக்கர வாகனங்கள், பொலிரோ ஈப்புகள். . .

[*2022 ஏப்ரல் 29*

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மிகச் சுருக்கமாகக் கேட்டார். 301 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 2021–லிருந்து நிவாரணத் தொகை தரவில்லை. அதனைத் தருவீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். நீங்கள் அதற்கான பதிலைச் சொல்லுங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், போன்ற நல்ல பல திட்டங்கள் இந்த ஆண்டு வரப்போகின்றன. மாண்புமிகு உறுப்பினர் இதுவரை கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.* Up–to–date *கொடுத்திருப்பதாகத்தான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது மாதிரி இருந்தால் இன்றைக்கே சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து, உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்கிறார்கள். எனினும் விடுபட்டிருந்தால் அதனை எழுதிக்கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையிலுள்ள அந்த இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டும். அதேமாதிரி இன்னும் 100 கிலோ மீட்டர் சோலார் மின் வேலி போடப்படவில்லை. அதனால், வன விலங்குகளால் மனித உயிரிழப்புகள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆகையால் 100 கிலோ மீட்டர் சோலார் மின் வேலி அமைக்கப்பட வேண்டும். அதேபோல், யானைகள் தாக்கி உயிரிழந்தால் ரூ.5 இலட்சம் நம்முடைய தமிழ்நாடு அரசு கொடுக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் ரூ.10 இலட்சம் கொடுக்கிறார்கள். அதேமாதிரி ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தற்போது ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.5*

2022 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.5 இலட்சத்தை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுதானே உங்களுடைய கோரிக்கை. அதோடு முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் யானைகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கு இன்றைக்கு வழங்குகின்ற இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லை. யானைகளால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கும், உயிர்ச் சேதத்திற்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடைய 'பசல் யோஜனா' காப்பீட்டுத் திட்டத்தை அமல் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அனைத்து கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*